பதிவஞ்சல் மூலமாக:

ந.க.எண்:62185/நி2/4/2019

மருத்துவக்கல்வி இயககககம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
நாள்:11.03.2021.

பொருள் : நிர்வாகம் - திரு.K.கார்த்திக் த/பெ.(லேட்) திரு.G.கிருஷ்ணகுமார், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கோவை - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்து அரசாணை மற்றும் அசல் சான்றுகள் பெறப்பட்டுள்ளது - சார்பு செய்தல் - தொடர்பாக.

பார்வை : 1. தங்கள் அலுவலக கடித ந.க.எண்:1909/நி1/2019, நாள்:22.07.2019 மற்றும் ந.க.எண்:6311/நி4/2019, நாள்:27.02.2020 மற்றும் 18.08.2020.

2. அரசாணை (2ப) எண்:44, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2) துறை, நாள்:23.02.2021.

3. அரசு கடித எண்:25980/ஏடி2/2020-4, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:23.02.2021.

*******

திரு.K.கார்த்திக் த/பெ.(லேட்) திரு.G.கிருஷ்ணகுமார், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கோவை அவர்களின் பணியினை வரன்முறை செய்து பார்வை 2-ல் காணும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பார்வை 3-ல் காணும் அரசு கடிதத்தில் தனியரின் கீழ் காணும் அசல் சான்றுகள் பெறப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மற்றும் அசல் சான்றுகளை இக்கடிதத்துடன் அனுப்பபடுகிறது. அவற்றினை தனியருக்கு உரிய முறையில் சார்பு செய்து பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு கோவை, அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை முதல்வர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

1. இறந்த அரசு ஊழியரின் மனைவி திருமதி.V.சௌந்தரம் அவர்கள் தனது மகனுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பித்த கடிதம் நாள். 27.08.2004. (அசல்).
2. விண்ணப்பதாரின் கடிதம், நாள்:26.02.2007 (அசல்)
3. பிற வாரிசுதாரர்களின் மறுப்பின்மை சான்று. (அசல்).
4. 18 கலம் கொண்ட முறைப்படுத்தப்பட்ட கடிதம்.(அசல்)
5. பணிநியமன ஆணையின் நகல்.

..2…

6. அரசு ஊழியரின் இறப்பு சான்றிதழ் (அசல்)
7. வாரிசு சான்றிதழ் (அசல்)
8. வரியநிலைச் சான்றிதழ் (கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற வழங்கப்படும் ஒருங்கிணைந்த சான்றிதழ். (அசல்)
9. விண்ணப்பதாரரின் கல்வி சான்றிதழ் (S.S.L.C., ) (அசல்)
10. H.S.C., மதிப்பெண் சான்றிதழ் (3 எண்கள்) (அசல்)
11. கல்வி சான்றுகளின் உண்மை தன்மை அறியும் சான்று. (இரண்டு) (அசல்)
12. மாற்றுச் சான்றிதழ் (அசல்)
13. விண்ணப்பதராரின் உறுதிமொழி (அசல்)
14. சாதிச்சான்றிதழ் (அசல்)
15. அரசு கடிதம் எண்:2941/க்யூ1/94-1 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 01.03.1994 இன்படி பணி வரண்முறை செய்ய குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் கோப்பு அனுப்பபட்டதற்கான சான்று (அசல்.).

மேலும், மேற்காணும் அசல் மூலச்சான்றுகளை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையினை இக்கடிதம் கிடைக்கபெற்ற 3 தினங்களுக்குள் தவறாது அனுப்பி வைக்குமாறும் கோவை, அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை முதல்வர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ப.சரத்பாபு
அரசு இணை செயலாளர்/
இணை மருத்துவக்கல்வி இயக்குநர் (நிர்வாகம்)

உண்மை நகல்/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

11/3/2021
அலுவலக கண்காணிப்பாளர்.

11/3/2021

பெறுநர் :

1. திரு.K.கார்த்திக், இளநிலை உதவியாளர். (உரிய வழியாக)

2. முதல்வர்,
அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி
மருத்துவமனை,
கோவை-641 015.

3. மாநில கணக்காயர், சென்னை-18.

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.K.கார்த்திக் (த/பெ. (லேட்) G.கிருஷ்ணகுமார்) இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப் பிரிவுகள் 20 (6) (b) மற்றும் 28 (2) ஆகியவற்றை தளர்த்தி பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

03 MAR 2021

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (எடி2) துறை**

அரசாணை (2ப) எண்.44

நாள்: 23.02.2021

திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி, மாசி – 11

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள். 23.01.2020.
3. மருத்துவக் கல்வி இயக்குநரின் கடித நக்.எண்.62185/நி2/4/2019, நாள். 23.09.2020.

******

**ஆணை:-**

மேலே மூன்றில் படிக்கப்பட்ட மருத்துவக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பதிவுரு எழுத்தராகப் (Record Clerk) பணியாற்றிய G.கிருஷ்ணகுமார் என்பவர் 09.07.2004 பணியிடையே மரணமடைந்து விட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் நிறைவு பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 27.02.1954 என்றும், பணியிலிருந்திருப்பின் அவருடைய உத்தேச ஒய்வு பெறும் நாள் 28.02.2014 என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இறந்த அரசு ஊழியரின் மகன் தனக்கு பணிநியமனம் வேண்டி 26.02.2007 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், அவரது பிறந்த தேதி 15.03.1988 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளான 09.07.2004 அன்று தனியரது வயது 16 ஆண்டுகள் 03 மாதங்கள் 24 நாட்கள் ஆகும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், அவரை தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி இளநிலை உதவியாளராக 29.05.2018 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்து, திரு.K.கார்த்திக் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 29.05.2018 முற்பகல் முதல் அவரது பணியை வரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(த.பி.பா.)

2. மருத்துவக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து, அதனை ஏற்று திரு.K.கார்த்திக், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 29.05.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்ய ஏதுவாக, தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி விண்ணப்பிக்கும் போது 18 வயது பூர்த்தியடையாததை கருத்தில் கொண்டு, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சட்டம், 2016 பிரிவு 20 (6) (b) (வயது குறித்த தளர்வு) மற்றும் பிரிவு 28 (2) (பணப்பலன்கள்) ஆகியனவற்றை தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 58-ன்கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தளர்த்தி, திரு.K.கார்த்திக், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 29.05.2018 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் இசைவுகளை முறையே அவற்றின் அலுவல் சாரா குறிப்பு எண்.2386/க்யூ1/2021-1, நாள் 11.02.2021 மற்றும் அலுவல் சாரா குறிப்பு எண்.4750/ஜி2/2021-1, நாள் 19.02.2021-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை-600 010.
திரு.K.கார்த்திக், இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-600 018.
**நகல்**
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை-600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23/2/2021
பிரிவு அலுவலர்
23/2/2021

ந.க.எண். 1555 / ந4/2021 நாள் .3.2021

அனுப்பப்படுகிறது

Administrative Officer
ESI Hospital, CBE - 15.

பெறுநர்
திரு.K கார்த்திக் இ.நி.உ